DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">O.S :55/2022</td></tr>
<tr><td colspan="3">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">வா.சா.2</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>மாரியப்பன்</td><td rowspan="2" colspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">கொத்தனார்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>கல்யாணி</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>மேட்டுத்தெரு</td><td rowspan="2" colspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">63</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 11-12-2024

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியாவேன் . என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன் . அதை படித்து பார்த்து கையெழுத்து செய்திருக்கிறேன்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து இன்று சாட்சி சொல்ல எனக்கு சம்மன் வந்தது. இந்த வழக்கு யாரால் எதற்காக யார் மீது போடப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அண்ணன், தம்பிக்குள் வீட்டு மாடி படியை இடிப்பது சம்மந்தமாக பிரச்சினை . எந்த தேதியில், என்னிடம் சொன்னார்கள் என்றால் 3, 4 மாதங்களுக்கு முன்பு சொன்னார்கள். தற்போது தான் சாட்சி சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள் . அந்த தெருவில் யார் யார் வீடு எந்தெந்த சர்வே நம்பர் என்று தெரியாது . நான் 2014 முதல் கும்பகோணம் நகராட்சியில் கவுன்சிலராக 5 வருடங்கள் இருந்தேன். தாவா வீட்டின் நீளம் அகலம் தெரியும், 28 அடி தென்வடல் முன்னால், நீளம் 206 கீழ்புறம் 35 அடி. செலவகணபதி 2017 இல் இறந்தார். செல்வகணபதிக்கு ஒரு பையன் . வாதி சண்முகத்தின் அப்பா பெயர் ஞாபகமில்லை . இந்த சொத்து வாதியின் அம்மா ராஜாமணிக்கு சொந்தம். நான் பத்திரம் எதுவும் பார்க்கவில்லை. வாதி வீடு கட்டியது

20 வருடத்திற்கு முன்பு இருக்கும். வருடம் தேதி தெரியாது. செல்வகணபதி என்ன தொழில் செய்தார் என்றால் டெலிபோன் டிப்பார்மெண்டில் வேலை செய்தார் . அவர் ஓய்பு பெற்று தான் இறந்தார் . செல்வகணபதி இருந்த வீடு எத்தனை வருடத்திற்கு முன்பு கட்டப்பட்டது என்று தெரியாது. பழைய வீடு. செல்வகணபதி அதை வேலை பார்த்தார். எந்த ஆண்டு வேலை பார்த்தார் என்று ஞாபகமில்லை . அவ்வாறு எத்தனை வருடத்திற்கு முன்பு வேலை பார்த்தார் என்று ஞாபகமில்லை . வீட்டின் அமைப்பு தெரியும். தெருவை ஒட்டி முதலில் ஒரு செட் உள்ளது. அந்த செட் சர்வே நம்பருக்கு உட்பட்டது. அதற்கு அடுத்து ஓட்டு வீடு உள்ளது . நாட்டு ஓடு. தெற்கே பார்த்த வீடு. ரோட்டில் இருந்து கீழண்ட பக்கம் 7.1/2 உள்ளது. பொது பாதை. நான் அதே தெருவில் 5 வது வீட்டில் இருப்பதால் சண்முகம் எனக்கு பழக்கம் . வாதி வசிக்கும் தெருவிற்கு 2, 3 வருடத்திற்கு முன்பு குடிவந்தேன் . முதல் விசாரணை சாட்சியத்தில், மேட்டு தெரு விலாசம் கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம் . அது நிரந்தர விலாசம். பிரமாண வாக்குமூலம் வக்கீலடம் நான் சொன்ன பிறகு அடித்தார்கள். சம்மன் வந்தவுடன் நான் வக்கீலை பார்த்துவிட்டு தான் வந்தேனா என்றால் ஆமாம் . 5 அடி அகல பாதை சம்மந்தமாக இவர்களுக்குள் என்ன பிரச்சினை என்று எனக்கு நேரடியாக தெரியாது.

**3 ஆம் பிரதிவாதி இந்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.